



# உதயன்

சுடர் : 37 | கதிர் : 258 | வியாழக்கிழமை 11 ஓகஸ்ட் 2022 | ஆடி 26 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50


# இந்திய உளவு விமானம்; சீனக் கப்பலுக்குப் பதிலடி?

**கொழும்பு, ஓகஸ்ட் 11**

இந்தியா, டோர்னியர் உளவு விமானம் ஒன்றை இலங்கைப் படைகளுக்கு வழங்கவுள்ளது. இதற்கான பேச்சு இடம்பெற்று வருவதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. 11

## இன்றும் ஞாயிறும் இல்லை மின்தடை

கொழும்பு, ஓக. 11

விடுமுறை நாளான இன்றும் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படாது என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாளை 12ஆம் திகதியும், நாளை மறுதினம் 13 ஆம் திகதியும் மாலை 6 மணி முதல் 9 மணி வரையிலான காலப் பகுதியில் ஒரு மணி நேரம் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-இ)

## இந்திய முட்டையை இறக்குமதி செய்க!

### பேக்கரி உரிமையாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 11

முட்டையின் விலைஉயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு உடனடியாகத் தலையிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திடம் இலங்கை 11

## ஆளுநரின் அடாவடியை கண்டித்துப் போராட்டம்

### விவசாயத் திணைக்களத்தினரால் நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிவகுமாருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்வகையில்வடக்கு மாகாண ஆளுநர்ஜீவன் தியாகராஜா ஊடகங்களுக்கு 11

## தீப்பற்றியதால் மாட்டிய பெற்றோல் களவாணி

### முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஓக. 11

விசுவமடு - வள்ளுவர்புரத்தில் வீடு புகுந்து மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோல் திருடும்போது தீப்பற்றியதால், 15 வயதுச் சிறுவன் ஒருவன் ஊரவர்களிடம் மாட்டிக்கொண்டுள்ளான். சந்தேக 11

## 12 திட்டங்களுக்கான நிதி: நிறுத்தியது ஜப்பான்

### ஒப்புக்கொண்டது அரசு

கொழும்பு, ஓக. 11

ஜப்பானிய சர்வதேச நிதியமான ஜெய்க்கா, இலங்கையில் நிதியளித்து வந்த 12 திட்டங்களுக்கான தமது நிதியளிப்பை நிறுத்தியுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். 12

### 19ஆம் திகதி முதல்

## மண்ணெண்ணெய் மக்களுக்கு விநியோகம்

### விலையும் அதிகரிக்கும்

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு



கொழும்பு, ஓக. 11

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளதாக 11

### எரிவாயு விநியோகம் —

## யாழ். மாவட்டச் செயலகத்தின் கட்டுப்பாட்டை மீறுகின்றாரா முகவர்?

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ். மாவட்டத்தில் எரிவாயு விநியோகத்துக்குரிய ஒழுங்குகள் யாழ். மாவட்டச் செயலர் க. மகேசனால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்குப் புறம்பாக அரச பணியாளர்களுக்கு நேற்று 11

## காலியாகின்றது காலிமுகத்திடல்!

### போராட்டக்காரர்கள் விலகிச் செல்ல முடிவு

கொழும்பு, ஓக. 11

123 நாள்களாக காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள் நேற்றுக் காலை முதல் அகற்றப்பட்டுள்ளன. போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த நூலகமும் 12

## போலி நாணயத்தாள் அச்சிட்டவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஓக. 11

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை அச்சிட்ட சந்தேகத்தில் தெல்லிப்பழை - பன்னாலையைச் சேர்ந்த 27 வயதான ஒருவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

தெல்லிப்பழை மற்றும் இளவாலை பொலிஸ் பிரிவுகளிலுள்ள கடைகளுக்கு. 12

## பெற்றோல் நிரப்பச் சென்றவர் திடீரென சரிந்து வீழ்ந்து சாவு



யாழ்ப்பாணம், ஓக. 11

மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்புவதற்காக வரிசையில் சென்றவர் திடீரென சரிந்து 12

## தாய்லாந்தில் தங்குவதற்கு கோத்தாவுக்கு நிபந்தனை

கொழும்பு, ஓக. 11

இலங்கையிலிருந்து தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தாய்லாந்தில் தற்காலிகமாகத் தங்கி, வேறு நாட்டில் நிரந்தரமான புகலிடம் தேடுவார் என்று தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்ஓசா தெரிவித்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச தாய்லாந்துக்கு மனிதாபிமான காரணங்களுக்காக தற்காலிகப் பயணத்தை மேற்கொள் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை ஊதியம் ரூ.17,500 ஆக உயர்வு!

## தினக்கூலியிலும் திருத்தம்



**கொழும்பு, ஓக. 11**
**தற்போதைய வாழ்க்கைச் செலவைக் கருத்திற்கொண்டு, ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப் படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

தேசிய குறைந்தபட்ச மாதச் சம்பளம் மற்றும் தேசிய குறைந்தபட்ச தினக் கூலியை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அமைச்சரவைக்கு முன் மொழிந்துள்ளார்.

அதன்படி தற்போதைய தேசிய குறைந்தபட்ச மாத வேதனம் 12 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 17 ஆயிரத்து 500 ரூபாவாகவும், குறைந்தபட்ச தினக் கூலி 500 ரூபாவிலிருந்து 700 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் கீழ் பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்தில் 59 வீதமாக அதிகரித்துள்ளதால், குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் கடும் நெருக்கடியில் உள்ளனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவும் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த ஒப்புக்கொண்டுள்ளது. (ச-இ)

# தவறான முடிவெடுத்து யுவதியொருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 11
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் மாணவியொருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழுந்துள்ளார்.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய உதயசங்கர் நிவேதிகா (வயது- 22) என்ற மாணவியே உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# குளவி கொட்டியதில் ஒருவர் பாதிப்பு

சாவகச்சேரி, ஓக.11
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடும் காற்றால் மரத்திலிருந்து வீழ்ந்த பனையோலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் கொட்டியதில் வீதியில் சென்ற ஒருவர் பாதிப்படைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மீசாலை வடக்கில் நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தருமராசா ரஜீவன் (வயது-37) என்பவரே பாதிக்கப்பட்டு, சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்போது வீசும் கடும் காற்றால் மரங்களிலிருந்து விழும் ஓலைக்குள் கூடு கட்டியிருக்கும் கருங்குளவிகள் தாக்கும் அபாயம் உள்ளதால் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ய-9)

# போலி 5,000 நல்லூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11
யாழ்ப்பாண நல்லூர் ஆலயத்தை அண்டிய பகுதியில் போலி 5 ஆயிரம் ரூபாவைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட்ட நபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-125)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருடப்பட்ட உழவியந்திரம் மீட்பு

## உதிரிப்பாகங்கள் இல்லாத நிலையில் கிடைத்தது

கிளிநொச்சி ,ஓக. 11
கிளிநொச்சி எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் களவாடப்பட்ட உழவு இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது எனத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உழவு இயந்திரத்துக்கு எரிபொருள் பெறுவதற்காக பரந்தன் நகரப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்தி வைத்திருந்தார். அந்த உழவு இயந்திரம் காணாமல்போன நிலையில், உரிமையாளரால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் உழவு இயந்திரம் விசுவமடு புன்னைநீராவி பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அருகில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பல உதிரிப்பாகங்கள் திருட்டுப் போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக பொலிஸாருடன் தடயவியல் பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)

# பொலிஸார் எனக்கூறி நகைகள் கொள்ளை!

## கொட்டாஞ்சேனையில் துணிகரம்

கொழும்பு, ஓக.11
பொலிஸார் எனக்கூறி கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பொலிஸார் பயன்படுத்தும் கைவிலங்கைக் காண்பித்து சந்தேக நபர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். சந்தேகநபர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் நகைகளின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# உதவித் தொகைக்கான இறுதித் திகதி ஓகஸ்ட் 15

சாவகச்சேரி, ஓக.11
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட நலிவடைந்த குடும்பங்களுக்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவுடன் மேலதிக கொடுப்பனவும், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் போன்றோருக்கு தலா 5 ஆயிரம் வீதமும் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் இந்தக் கொடுப்பனவு கடந்த மே மாதம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளை அரசாங்கமும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் ஆகியோருக்கான கொடுப்பனவை (தலா 5 ஆயிரம் ரூபா) உலக வங்கியும் வழங்கியிருந்தன.

கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான இறுதித் தினம் ஓகஸ்ட் 15 ஆம் திகதி எனவும், அதன்பின்னர் கொடுப்பனவுக் கணக்குகளை முடிவுறுத்தி இதுவரை கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் விவரங்களையும் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெறுவதில் சிலர் அக்கறை காட்டாததால் கொடுப்பனவுகளை நிறுத்தி விவரங்களை அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)



# கலைமகள் சனசமூக நிலையம் சரவணபவனால் திறந்து வைப்பு

வலி.மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட அராலி கிழக்கு கலைமகள் சனசமூக நிலையம் நேற்று மு.ப. 10 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் ம.பரமகுலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது. அராலி கிழக்கு வாலயம்மன் ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்று விருந்தினர்கள் பான்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டனர். பின்னர் மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்று, சனசமூக நிலையத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சனசமூக நிலைய நிறுவுநர் தவரத்தினசிங்கத்தினுடைய நினைவுருவப் படமும் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் நடனேந்திரன், வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான உமாபதி, ஜெயந்தன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.சிவானந்தன், அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர், வலி.மேற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிதி ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தினுடைய செலவு ரூ. 479.43 பில்லியன் உயர்வு!

**கொழும்பு, ஓக. 11**

**அரசாங்கத்தின் இந்த ஆண்டுக்கான செலவினம் 3 ஆயிரத்து 275.8 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீட்டு சட்டவரைவு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.**

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டவரைவின்படி அரசாங்கத்தின் செலவு 2 ஆயிரத்து 796.44 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் திருத்தப்பட்ட சட்டவரைவின் ஊடாக அரசாங்கத்தின் செலவினம் 479.43 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிகளவான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு என்று 13.4 பில்லியன் ரூபா ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் வசம் உள்ள அமைச்சுக்கு சுமார் 734 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சுக்கு 467 பில்லியன் ரூபாவும் பாதுகாப்பு அமைச்சுக்கு 376 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு 200 பில்லியன் ரூபா, சுகாதார அமைச்சுக்கு 248 பில்லியன் ரூபா மற்றும் வர்த்தக அமைச்சுக்கு 93 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே வேளை போக்குவரத்து அமைச்சுக்கு 371 பில்லியன் ரூபா, விவசாய அமைச்சுக்கு 138 பில்லியன் ரூபா மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகத்துக்கு 27 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபலமான நட்சத்திர விடுதியொன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

* உணவு பரிமாறுபவர் - Steward
* அறை பராமரிப்பாளர் - Room Attendant
* உணவு விநியோகம் செய்பவர் - Delivery Rider
* பாத்திரம் சுத்தப்படுத்துபவர் - Dishwasher
* வெளிப்புறம் சுத்தப்படுத்துபவர் - Out area Cleaner

தொடர்பு: 076 624 8529, 077 780 3203

Email - hr@valampurihotel.com


## கண்ணீர் அஞ்சலி



கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண சபை தலைவராகிய

**சிவசோதிலிங்கம் சொரூபன்**

அவர்கள்

இறைபதமடைந்தமையிட்டு அவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானையும் ஶ்ரீமத் சிதம்பரேஸ்வரப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம் 20.06.1984 | மறைவு 10.08.2022

ஆலய சிவாச்சாரியார், புனருத்தாரண சபை, அன்னதான சபை, உபயகாரர்கள், தொண்டர்கள்
வீரகத்தி விநாயகர் ஆலயம் கொல்லங்கலட்டி

## அடுத்த இரு மாதங்களில் மருந்துகள் தீர்ந்துவிடும்!

*ஐ.நா.மக்கள் தொகை நிதியம் எச்சரிக்கை*

இலங்கையில், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அதிகமான மருந்துகளின் கையிருப்புத் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நிதியம் மேலும் தெரிவித்ததாவது:-இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பொது மருத்துவமனைகளில் பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவப்பொருள்கள் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இது தாய்வழி சுகாதாரம் மற்றும் கருத்தடைக்கான அணுகல் உள்ளிட்ட சுகாதார சேவைகளை வழங்குவதைக் கடுமையாகப் பாதிக்கின்றது. அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் இல்லாததால் 2 லட்சத்து 15 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம், ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து கர்ப்பிணிப் பெண்களின் ஆரோக்கியத்தை நிலைநிறுத்துவதற்கு ஒருதொகுதி உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்களை சுகாதார அமைச்சிடம் நேற்றுமுன்தினம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,இ)

## சர்வகட்சி அரசாங்கத்துக்கு லங்கா சமசமாஜ ஆதரவு

கொழும்பு, ஓக.11

சர்வகட்சி அரசாங்கத்துக்கு லங்கா சமசமாஜக் கட்சி ஆதரவு வழங்கும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தெற்கு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுமக்களின் வாழும் உரிமையை உறுதி செய்தல், அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை முதன்மைப்படுத்தி சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது - என்றார். (ம-14.இ)


## Board of Directors for Jaffna College

"Established in 1872"

**VACANCY FOR THE POST OF PRINCIPAL OF JAFFNA COLLEGE VADDUKODAI**

Applications are invited from suitable candidates for the above post. The Applicants must meet the following requirements:

**Ideal candidate will**

- possess a degree from a university recognized by the University Grants Commission with a post graduate qualification. Applicants with high academic achievements including a doctorate in the field of Education or related fields will have an added advantage.
- be a communicant member of the Jaffna Diocese of the Church of South India.
- possess a minimum of ten years of secondary school teaching experience.
- possess the ability, personality and caliber to command the respect of the community.
- possess excellent leadership qualities.
- be physically fit and in good health.

Salary is negotiable. An official residence will be provided

Applications should be sent by registered post along with copies of certificates to reach within one month from the date of this advertisement to the following address:

The Chairperson
Selection Committee of the Board of Directors of Jaffna College
No.17, Frances Road,
Colombo 06.





எங்கட தாயகத்தில எந்த நினைவு தினம் எண்டாலும் அதை நினைவு வைச்சு முன்னுக்கு நிண்டு செய்யிறது சைக்கிள் கட்சியும், சிவாஜிலிங்கத்தாரும்தான். இப்ப கொஞ்சக்காலமா சிவாஜிலிங்கத்தார் வருத்தமெண்டு இந்தியாவில ட்ரீட்மெண்டுக்கு போயிருக்கிறதால, முன்னணிக்காரர் தான் தனிக்கச்சேரி வைக்கிறவை. இப்பிடி அவையள் ஆர் என்ன தடை போட்டாலும் அதையும் மீறி அஞ்சலிக்கிறதாலதான், இப்ப இருக்கிற இளம் தலைமுறைக்கு முந்தின காலத்தில இலங்கை ஆமி என்னென்ன வெறியாட்டமெல்லாம் ஆடினது? ஏன் நாங்கள் போராட வேண்டி வந்தது? இனியும் ஏன் போராடவேணும்? எங்கட இயக்கம் என்னென்ன சாதனை எல்லாம் செய்தது? எண்ட சங்கதியள் எல்லாம் தெரியவந்திருக்கு. அதை ஒருத்தரும் இல்லையெண்டு சொல்லவே ஏலாது. அந்தளவுக்கு முன்னணி எண்டாலே துணிச்சலா எதையும் முன்னுக்கு நிண்டு செய்யிற கட்சி எண்டுதான் சனத்திட்ட ஒரு பெயர் இருக்குது.

ஆனால் ஆற்றையோ கண்ணூறோ என்னவோ, இப்ப முன்னணிக்காரருக்கு அவை செய்த ஒரு நினைவேந்தலால அவையைப் பார்த்துச் சனங்கள் கெக்கட்டம்விட்டுச் சிரிக்கினம். கிருசாந்தியை ஒருத்தரும் மறந்திருக்க மாட்டியள். செம்மணியில இலங்கை ஆமி பிடிச்சு, கொலை செய்து, தாட்டுவைச்ச கதையெல்லாம் அறிஞ்சிருப்பியள். அந்தக் கிருசாந்தியைப் பிடிச்சு ஆமி கொலை செய்தது 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி. சும்மா கூகிளில கிருசாந்தி எண்டு ரைப் பண்ணினாலே அவா செத்தநாளை உடனையே கண்டுபிடிச்சிடலாம். ஆனால், செப்ரெம்பர் ஏழாம் திகதி அஞ்சலிக்க வேண்டிய கிருசாந்தி நினைவுநாளை, ஓகஸ்ட் ஏழாம் திகதியே செம்மணிக்குப் போய் 'அட்வான்ஸா' அஞ்சலிச்சிருக்கினம் முன்னணிக்காரர். நல்லகாலம், அந்த அஞ்சலி நிகழ்ச்சியில ரண்டு 'கஜா'க்களும் மிஸ்ஸிங். இப்பிடி அவசரக்குடுக்கைத்தனமா, கிருசாந்தி எப்ப செத்தவா எண்டு கூட தெரியாமலே அஞ்சலி செய்யப்போனவை எண்டு சனம் கேக்குது. அந்தக் கேள்வியிலையும் ஒரு நியாயம் இருக்குத்தானே? வரலாறை எங்கட அடுத்த தலைமுறையிட்ட கையளிக்கத்தானே இப்பிடியான நினைவேந்தல்களைச் செய்யிறம். அதையே பிழையான நாளில செய்தால், கொஞ்ச நாளைக்கு பிறகு கிருசாந்தி செப்ரெம்பர் மாசம் சாகேலை, ஓகஸ்ட் மாதம்தான் செத்தவா எண்டும் நம்பிற ஒரு தலைமுறை வந்திடவும் கூடும். எதையும் ஆராய்ஞ்சு செய்யவேணும். நினைவேந்தல் செய்யிறதால காட்டுற அவசரத்தைகொஞ்சம் அந்த நினைவுநாளுக்கான விசயத்தைப் பற்றி அறியிறதிலையும் காட்டவேணும் கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு கலைப் போட்டி!

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் முதலாவது ஆண்டு நினைவை முன்னிட்டு, சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் கலைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலும் தேசிய ரீதியாகவும் கலைப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.
வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் போட்டிகள் தனிப் போட்டி, குழுப்போட்டி என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.
போட்டிகள் தொடர்பான விதிமுறைகள், விண்ணப்பப்படிவம் என்பன பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. பாடசாலை மட்டத்தில் பங்குபற்றுபவர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க முடியும். (ம-14)

# மடுத் திருவிழாவில் 400,000 பக்தர்கள்!

### முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் எதிர்பார்ப்பு
### முகக்கவசம் கட்டாயம் என்றும் அறிவிப்பு



**மன்னார், ஓக. 11**

**மடுத்திருவிழாவுக்கு இந்த வருடம் சுமார் 4 லட்சம் பக்தர்கள் கலந்துகொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக திருவிழா முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாப் பெருந்தொற்று தீவிரமாகிவரும் நிலையில், திருவிழாவுக்கு வருவோர் மாஸ்க் அணிவது கட்டாயம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

மடுத்திருவிழா தொடர்பான முன்னாயத்தக்கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.
ஆலய வளாகத்தில் குடிதண்ணீர் வசதிகள் மற்றும் மலசலகூட வசதிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அத்துடன், சுமார் 300 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
இராணுவத்தினரும் பொலிஸாருக்கு மேலதிகமாக கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-60)



## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக.11
மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையிலும் அம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப் போது கொந்தளிப்பாகக் காணப்படும்.
எனவே புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையிலும் கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடற்படை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் போது கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் அவதானமாக இருக்க வேண்டும் -என்றுள்ளது. (ய-இ)

## மடுமாதா பெருவிழாவுக்கு விசேட பேருந்துச் சேவை

### பூநகரி பிரதேசசபை கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 11
மடுமாதா திருத்தலத்துக்கு விசேட பேருந்து சேவையை ஏற்பாடு செய்யவேண்டும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் பிரதான பிராந்திய முகாமையாளருக்கு பூநகரிப் பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பான கடிதமொன்றை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளருக்கு பூநகரிப் பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மடுத் தேவாலயத்தின் பெருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 16ஆம் திகதி வரை இந்தத் திருவிழா நடைபெறவுள்ளது.
வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில், முழங்காவில், குமுழமுனை, ஜெயபுரம், இரணைமாதாநகர் எனப் பூநகரி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இருந்தும் பல கிராமங்களில் இருந்தும் பல நுற்றுக்கணக்கான பக்தர்கள் மடுத் தேவாலயத்துக்கு வருடா வருடம் சென்று வருகின்றனர். ஆனால் இந்த வருடம் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம், ஏனைய பொருள்களின் விலையேற்றங்கள் எனப் பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடியால் மடுத் தேவாலயத்துக்கு மக்கள் சென்று வரவும் நேர்த்திகளை நிறைவேற்றவும் பல தடைகள் காணப்படுகின்றன.
எமது பிரதேசத்திலிருந்து மடுத் தேவாலயத்துக்குச் சென்று வருவதற்குத் தனியார் வாகனத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது. இதனால் பொருண்மியம் நலிந்த மக்கள் ஆலயத்துக்குச் சென்று தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளனர்.
இந்த நிலையில் பொதுப்போக்குவரத்து மூலமாக மக்கள் மடுத் தேவாலயத்துக்கு சென்று வருவதற்கான வசதிகளை ஏற்படுத்தி மக்களுக்கு உதவுமாறு பூநகரி தவிசாளர் உட்பட சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்ததாகக் கோருகின்றோம்- என்றுள்ளது. (ம-14,13)

## மடுத்திருப்பதியின் தூய்மைக்கு களங்கம் ஏற்படுத்தவேண்டாம்

### மன்னார் ஆயர் கோரிக்கை

மன்னார், ஓக. 11
மடு திருத்தலத்துக்கு வருவோர் பயபக்தியுடன் வழிபாடுகளில் கலந்து கொண்டு ஆலயத்தின் புனிதத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். மடுத்திருப்பதியின் தூய்மைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் எவரும் செயற்படக்கூடாது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.
மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மடுத் திருத்தலத்தின் ஆவணி மாத பெருவிழாவுக்கான கூட்டம் மடுத்திருத்தலத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதன்போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பெருவிழாவை முன்னிட்டு தற்போது 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மடுவுக்கு வந்துள்ளனர். இங்கு அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் யாவும் பக்தர்கள் தங்குவதற்காக தன்னகப்படுத்தப்பட்டுள்ளன. பல நூற்றுக்கணக்கான கூடாரங்கள் அமைத்து பலர் இங்கு தங்கியுள்ளனர். இவற்றுடன் மேலும் பெருந்தொகையான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இவ்வாறான ஓர் இடத்தில் மக்கள் ஒன்றுகூடும்போது நாங்கள் அவர்களின் ஆரோக்கியத்தையும் அவசியம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.
அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் பெருவிழாவில் முகக்கவசம் அவசியம் அணிய வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அதற்கமைய முகக்கவசம் அணிவதன் மூலம் எம்மையும் மற்றவர்களையும் பாதுகாக்க முடியும் - என்றார். (ம-14,60)

## மானிய விலையில் பயன்தரு மரங்கள்



யாழ்ப்பாணம், ஓக. 11
யாழ். மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் மானிய விலையில் பயன்தரு மரக்கன்றுகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. கருங்காலி மரம் 100 ரூபாவுக்கும் தேக்கு, வேம்பு, மருது, இலுப்பை, புங்கை, திருக்கொன்றை ஆகிய மரக்கன்றுகள் 50 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த மரக்கன்றுகளை செவ்வாய், புதன், [illegible] 9 மணி முதல் பிற்பகல் 2 [illegible] முடியும் என யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பற்றாக்குறையால் மாணவர்கள் கல்வியிழப்பு!

## பாடசாலைகளுக்கான வருகையிலும் வீழ்ச்சிநிலை: இலங்கைத் தேசிய அதிபர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 11**

**நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியின் எதிரொலியாக பாடசாலை மாணவர்களின் வருகை 30-40 வீதமாகக் குறைவடைந்துள்ளது என பாடசாலை அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் இலங்கை தேசிய அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மொஹான் வீரசிங்க தெரிவித்ததாவது:-

உணவுப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பிரச்சினையே பாடசாலை மாணவர்களின் வருகையின் வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தினமும் பாடசாலைகளின் காலைக்கூட்டங்களில் கணிசமான மாணவர்கள் மயக்கமடைகின்றனர். இதனை ஆராய்ந்தபோது உணவருந்தாமல் மாணவர்கள் பாடசாலைக்கு வரும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

60 சதவீதமான மாணவர்கள் மதிய உணவை பாடசாலைக்குக் கொண்டுவருதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பால், உணவு வழங்க முடியாமல், தங்கள் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமல், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஏராளமான குடும்பங்கள் உள்ளன.

அதேவேளை பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் ஆசிரியர்களின் மன உளைச்சல் மாணவர்களையும் பாதிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. மதிய உணவு வழங்கும் பாடசாலைகளில் குழந்தைகளின் வருகை 90 வீதத்துக்கும் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே மாணவர்களின் போசணை தொடர்பில் அரசாங்கம் உடன் அக்கறை செலுத்த வேண்டும் -என்றார்.

(ச-இ)

## மஹோற்சவம்

சாவகச்சேரி, ஓக. 11

மட்டுவில் தெற்கு சிறிநாராயணன் ஆலயத்தின் மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் கிருஷ்ண ஜெயந்தி தின உறியடி உற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றைக் கருத்திற்கொண்டு உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி பெருவிழாவில் கலந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-14-9)



கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலய தரம்1 மாணவர்களுக்கு பால் வழங்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி நகர றோட்டறி கழகத்தால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ய-13)



யாழ்.கோப்பாய் பலானை கண்ணகி அம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது. பலநூறு பக்தர்கள் இந்தத் திருவிழாவில் பக்திபூர்வமாகக் கலந்துகொண்டனர். (ய-20)


## நல்லூர்க் கந்தன் மஹோற்சவ சிறப்பம்சம்




வளங்கொழிக்க வரம் தருவாய் வேலவனே முருகா!
கடைக்கணித்தால் பொன்குவியும் மாலவனின் மருகா!
நினைத்ததெலாம் நடக்கவைக்கும் வேலவனே முருகா!
அனைத்தையுமே எமக்களிக்கும் மாலவனின் மருகா !

(CR 36864) (3/6)

திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

சாரங்கா ஜுவலரி

(நியூ சாரங்கா ஜுவலரியும், சாரங்கா நகைமாடமும் ஒரே கட்டடத்தில் இயங்குகின்றது)

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவை

RIA, Western Union, Money gram

Tel : 021 222 6972, Fax : 021 222 8869

E-mail :sarankajewellers@yahoo.com, web : www.sarankajewellers.com




வாழ்க்கை ஒரு நடைப்பயணம் என்பதனை உணர்ந்தோம்
வழிநடந்து வழிநடந்து வருவதென விரைந்தோம்
சூழ்ந்திருக்கும் வளங்களெலாம் வழிப்பயணக் காட்சி
சுடர்வேலன் திருவடியை அடைவது நம் மாட்சி!

(CR 36865) (3/6)

திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

நியூ வீ.எம்.கே ஜுவல்லரி

இல. 80/03, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2515, 077 784 9369




அரோகரா அரோகரா என்று சொல்லுங்கள்
ஆறுமுகன் பேரழகை பாடிச் செல்லுங்கள்
காவடிக்குள் ஆடிவரும் கந்தனையே பாருங்கள்
கவலையெல்லாம் தீர்ந்திடவே கந்தன் நாமம் சொல்லுங்கள்

(CR 36882) (3/6)

திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

வாணி ரெக்ஸ்

No.81, Grand Bazzar Road, Jaffna.

Mob : 077 748 8093

T.P 021 222 5578 / 021 222 9286


### கண்களை பறிக்கும் மஞ்சம்

கலைமலியும் திருமஞ்சம் கண்களைப் பறிக்குமே
காந்தத் திருமுருகன் அழகால்
கல்நெஞ்சம் இதைக்கண்டு கரைந்தோடுமே
கனக வைரம் மாணிக்க அழகால்
விலைமதிக்க முடியாத மஞ்சமிது அடடா
விண்ணவரும் கண்டுகளிப்பர்
வேல்முருகன் வள்ளி தெய்வயானை சகிதம்
வெளியுலா வரும் காட்சி அற்புதம்
அலைபாயும் எண்ணமெலாம் அடங்கிவிடும்
ஆனந்தம் எல்லாம் திரண்டு வரும்
அத்தனை முரண்பாடுகளும் தீர்ந்துவிடும்
அவசர உலகோ அமைதி பெறும்
நிலைபெறும் கலாசார பண்பாடுகள் யாவும்
நீள நினைந்து வாழ விரும்பும்
நூதன கோபுர, நெடிய மதில், நல்லூரில்
நேரமும் மஞ்ச உலாவும் ஆச்சரியமே!



கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீதிக்கான குரலை ஓங்கச் செய்வோம்!

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியும், அவர்களுக்கு நீதி தேடியும் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை இரண்டாயிரமாவது நாளை நிறைவு செய்கின்றது.

ஐம்பதல்ல, நூறல்ல சுமார் இரண்டாயிரம் நாள்களாக தமிழர் தாயகம் – குறிப்பாக காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இந்தப் போராட்டத்தை எத்தனையோ தடங்கல்கள் – அச்சுறுத்தல்கள் – இடையூறுகளைத் தாண்டி தொடர்ச்சியாக முன்னெடுத்தபோதிலும், நீதியென்பது இன்னும் எட்டாக்கனி நிலைதான். போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட போதிலும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீடு, இறப்புச் சான்றிதழ்கள் என்பனதான் சிறிலங்கா அரசாங்கம் முன்வைத்த உச்சபட்சத் தீர்வுகளாக உள்ளன. இவற்றைத் தவிர வேறெந்த நகர்வையும் சிறிலங்கா அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் கிஞ்சித்தும் முன்னகர்த்தவில்லை. அதற்குரிய ஆத்மார்த்தமான விருப்பம்கூட கொழும்புக்கு இல்லை.

காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் இரண்டாயிரம் நாள்களாக விடுக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளும் இலங்கையின் நீதிக்கட்டமைப்பை அசைக்கவில்லை. அரசின் இரும்பு இதயத்தை இளகச்செய்யவில்லை. ஆதலால் தற்போது எம்முன்னுள்ள ஒரே தெரிவு 'போராட்டத்தைத் தீவிரப்படுத்தல்' தான். இப்படியொரு நிலையில்தான் நாளைய விடியலை எதிர்கொள்கின்றது தமிழர் தாயகம்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 51ஆவது அமர்வு அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் பேணப்படும் பாங்கு, போரில் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கான நீதிக்கட்டமைப்பு – நிலைமாறுகால நீதி – பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனது பிடியை இறுக்கும் என்றே கருதப்படுகின்றது. இலங்கைக்கு எதிராக மிகச் சமீப நாள்களாக எழுந்துள்ள சர்வதேச எதிர்ப்பலைகள் இவற்றைக் கட்டியம் செய்கின்றன. இப்படியொரு பின்னணியில் இந்தக் காணாமலாக்கப்பட்டோருக்கான இரண்டாயிரமாவது நாள் போராட்டத்தின் கனதியை – அதன் தாக்கத்தை – தாயகத்தில் மட்டுமல்லாது சர்வதேசத்தை நோக்கி நகர்த்த வேண்டியது தமிழர்களாகிய எமது காலக்கடமையாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பித்தாலும், அதற்குரிய நகர்வுகள் அறிக்கையிடல்கள் தற்போதே ஆரம்பித்துள்ளன. ஆதலால், இந்த வரலாற்றுக் கடமையை 'தமிழர்களாக' நிறைவேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு உள்ளது. அதை இதயத்தில் இருத்தி நாளைய விடியலை தமிழர் தாயகம் எதிர்கொள்ளவேண்டும்.

காணாமலாக்கப்பட்டது மாற்றான் வீட்டுப் பிள்ளைகள் அல்லர். எம் பிள்ளைகள், எம் உறவுகள், எம் உணர்வுகள். காலக்கடமைகளை நிறைவேற்றாத பட்சத்தில், அது வரலாற்றுத் தவறாகிவிடும். தமிழர் தாயகம் அந்தப் பாரதூரத்தை இழைக்காதிருக்க, நாளைய கவன்வீர்ப்பில் அணியெனத் திரண்டு, உலகின்முன் மீண்டுமொரு முறை காணாமலாக்கப்பட்டோருக்கான நீதியைக் கோருவோம்.

### நாளொரு நல்வார்த்தை

"நூலகங்களையும் புத்தகங்களையும் பார்க்கும் போதெல்லாம் என் வாழ் நாள் முழுவதையும் படிப்பதிலும் கற்பதிலும் செலவிட முடியவில்லையே என்று வருந்துகின்றேன்" - **ஃபிடல் காஸ்ட்ரோ**



# இலங்கையில் மீண்டும் கொரோனாக் கொத்தணி

## நுரைச்சோலை மின்நிலையத்தில் 103 பேருக்குத் தொற்று உறுதி




**கொழும்பு, ஓக. 11**

**நுரைச்சோலை லக் விஜய அனல் மின்நிலையத்தில் பணியாற்றும் 103 ஊழியர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் சமூகத் தொடர்பு நிலைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று தீவிரமாகின்றது என்று சுகாதாரத் துறை சமீப நாள்களாகத் தொடர்ந்து எச்சரித்து வந்தது. இந்த நிலையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தொற்றுடன் அவதானிக்கப்பட்ட சம்பவமாக இது பதிவாகியுள்ளது. நுரைச்சோலை லக் விஜய அனல் மின்நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொற்று, நாட்டில் மீண்டும் கொத்தணியொன்றை ஏற்படுத்திவிடுமோ என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு: சலுகை அவசியம்!

## திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழலால் அதிக மின்கட்டணத்தை செலுத்த முடியாத மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் அல்லது சலுகையை அரசாங்கம் அறிமுகப்படுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறைந்த வருமானம் பெறுபவர்கள் தொடர்ச்சியான விலைவாசி உயர்வை சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட மின்கட்டண உயர்வு மக்களுக்கு மேலும் பாதிப்பாக அமைந்துள்ளது. மின்சாரக் கட்டணம் பெருமளவாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் மாற்றுவழியை அல்லது பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்கவேண்டும். அதிக மின்கட்டணத்தை செலுத்த முடியாத மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தவேண்டும்.

தற்போது நிலவும் பொருளாதாரச் சூழலால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே நீர் மற்றும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக சில சலுகைகளை விரைவில் வழங்குமாறு அரசாங்கத்துக்கு முன்மொழிகிறேன்- என்றார். (ச-இ)

**நாளை**

12.09.2022
வெள்ளிக்கிழமை
ஆடி 27

சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34 - 12.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபையின் ஊழலே மக்கள் மீது பொறிந்துள்ளது

## நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் கண்டனம்

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள இழப்பு பொது மக்கள் மீது பொறிக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் ரஞ்சித் விதானகே மேலும் தெரிவித்ததாவது:-

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுடன் மின் மற்றும் நீர்க்கட்டண உயர்வும் மக்களின் மீது பொறிந்துள்ளது. பொதுமக்களுக்கு தேவை சலுகைகளே தவிர கட்டண உயர்வு அல்ல. இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் சபை ஆகியவற்றின் தலைவர்களின் குறைபாடுகளாலேயே இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பைப் பொதுமக்கள் மீது திணிக்கக்கூடாது -என்றார். (ச-இ)

# குடிதண்ணீர் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி

கொழும்பு. ஓக. 11

குடிதண்ணீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான பிரேரணையை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். இதன் போதேஅமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கியது.

அதன்படி, குடிதண்ணீர்க் கட்டணத்தில் திருத்தம் செய்வது குறித்து எதிர்காலத்தில் அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 10 வருடங்களாக குடிதண்ணீர்க் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-14-இ)

# பெண்கள் சுகாதார சேவையை கட்டமைக்க 10.7 மில். டொலர்!

## நன்கொடை கோரும் ஐ.நா. சனத்தொகை நிதியம்

கொழும்பு, ஓக. 11

**இலங்கையில் வாழும் 2 மில்லியனுக்கும் அதிகமான பெண்களுக்கு அடுத்த 6 மாதகாலத்துக்குத் தேவையான உயிர்காக்கும் சுகாதார சேவையை பெற்றுக்கொடுக்க 10.7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி நன்கொடை வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நட்டாலியா கனேம் தெரிவித்ததாவது:-

சுதந்திரமடைந்ததன் பின்னர் தற்போது இலங்கை மிகமோசமான சமூக பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது.

அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மின் விநியோகத்தடை ஆகியவற்றின் விளைவாக நாட்டின் சுகாதாரக்கட்டமைப்பும் சுகாதாரசேவை வழங்கலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இது பெண்களின் கர்ப்பகால நலன் உள்ளடங்கலாக பாலின மற்றும் கர்ப்பிணிப்பெண்களுக்கான சேவை வழங்கலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே தற்போதைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட பெண்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்வதும் அவர்களது சுகாதாரசேவையை கட்டமைப்பதும் உறுதிசெய்யப்பட வேண்டும்.

அதன்படி தற்போது விடுக்கப்பட்டிருக்கும் 10.7 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடைக் கோரிக்கையின் ஊடாக 1.2 மில்லியன் பேருக்கு அவசியமான உயிர்காக்கும் மருந்துப்பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கும், பெண்கள் மற்றும் யுவதிகளுக்குத் தேவையான 10ஆயிரம் கர்ப்பகால உடைகளை வழங்குவதற்கும், அவசியமான சுகாதாரவசதிகளைப் பெறுவதற்கென 37 ஆயிரம் பெண்களுக்கு காசோலைகளை வழங்குவதற்கும், 4 ஆயிரம் பெண்களுக்குத் தேவையான மாதவிடாய் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது -என்றார். (ச-இ)

# இவ்வாண்டில் இதுவரை 48, 777 பேருக்கு டெங்கு



கொழும்பு. ஓக. 11

2022 இல் இதுவரையான காலப்பகுதியில் 48 ஆயிரத்து 777 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் பணிப்பாளர் விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளதாவது

கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 437 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 916 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அத்துடன் கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் - என்றார். (ச-இ)

# நெருக்கடிகளுக்கு தீர்வு காண தம்மிக்க தலைமையில் குழு!

கொழும்பு, ஓக.11

சுதந்திரத்தின் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக விசேட பொருளாதார அபிவிருத்திக் குழுவை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள உத்தேச அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல வர்த்தகருமான தம்மிக்க பெரேராவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பொருளாதாரக் கொள்கையொன்றைத் திட்டமிடுதல், அதை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய முக்கியமான பொறுப்புக்கள் மேற்படி குழுவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாதாந்தம் 800க்கும் 900க்கும் இடைப்பட்ட அமெரிக்க டொலர் என்ற நாட்டின் வருமானமானது தற்போதைய நிலையில் 250க்கும் 300க்கும் இடைப்பட்ட தொகையாகக் குறைவடைந்துள்ளது.

புதிய அபிவிருத்திக் குழுவின் முக்கியமான செயற்பாடு முடிந்தளவு நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நடுநிலை வகிப்பதாகும் என்றும், புதிய அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்குள்ள அதிகாரம் மற்றும் வசதிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நேரடிப் பங்களிப்பை குழுவின் தலைவர் வழங்கும் வகையில் அனைத்து வாய்ப்புகளையும் அவருக்கு வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

# லாப்ஸ் எரிவாயு விலையை குறைப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, ஓக. 11

லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் விலையைக் குறைப்பதற்கு லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

லாப்ஸ் எரிவாயுவின் விலை மற்றும் விநியோக முறை தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின், அது தொடர்பில் ஆராயுமாறு வர்த்தக அமைச்சருக்குத் தெரிவிக்கப்படவுள்ளது. அத்துடன் விலைத் திருத்தம் தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுக்கும் - என்றார். (எ-14,இ)

# பெரமுன விரைவில் மறுசீரமைக்கப்படும்

கொழும்பு, ஓக. 11

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன மீண்டும் மறுசீரமைக்கப்படவுள்ளது. அதற்கமைய பெரமுனவின் தேசிய மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அந்தப் பதவி கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பிறிதொருவருக்கு வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. தலைவர் பதவியில் மஹிந்த ராஜபக்சவும், பொதுச்செயலாளர் பதவியில் சாகர காரியவசமும் நீடிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# தபால் கட்டணங்களும் இம்மாதம் அதிகரிக்கும்

தபால் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்கட்டணம் மற்றும் தண்ணீர்க் கட்டணம் ஆகியவற்றின் அதிகரிப்பைத் தொடர்ந்து தற்போது தபால் கட்டணத்திலும் திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தபால் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

அதன்படி 15 ரூபாவாக இருந்த சாதாரண தபால் கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. 45 ரூபாவாக இருந்த பதிவுத் தபால் கட்டணம் 110 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது. அத்துடன், 250 கிராம் எடையுள்ள தபால் பொதிக்கான கட்டணம் 200 ரூபாவாகவும் உயர்த்தப்படவுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள்கேள்வி அறிவித்தல் -2022

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப்படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

* கேள்விப்படிவக்கட்டணம் :- ரூபா 1,000.00
* கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 11.08.2022 பி.ப 12.30 தொடக்கம் 16.08.2022 பி.ப 12.30 மணிவரை (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணிவரை)
* கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :- 16.08.2022 பி.ப 12.30 மணிவரை
* கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 17.08.2022 முற்பகல் 10.00 மணிவரை
* கேள்விப்படிவம் திறத்தல் :- 17.08.2022 முற்பகல் 10.00 மணிக்கு
* தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**மாநகரமுதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# அறிவித்தல்

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலப்பரப்புக்கள் மற்றும் நெற்பரப்புக்களில் பயிர்ச்செய்கையினை மேற் கொள்பவர்கள் அல்லது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துபவர்கள் தாங்கள் ஆலய பரிபாலன சபையினருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரதியுடன் அல்லது எழுத்து மூல அனுமதியுடன் அல்லது அனுமதி பெறப்பட்டிராத சந்தர்ப்பத்தில் தாங்கள் பயன்படுத்தும் காணியின் அமைவிடம் மற்றும் அளவுப் பிரமாணங்களைக் குறிப்பிட்டு **2022.08.26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு** மேற்படி ஆலய பரிபாலன சபைச் செயலாளருக்கு எழுத்து மூலமான கடிதத்தினைப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட திகதியினுள் கடிதம் கிடைக்கப்பெறாத காணிகள் எவ்வித கலந்துரையாடலின்றி பரிபாலன சபையினரால் நிர்வாகிக்கப்படும்.

**சோ.கோபிகிருஸ்ணன் - 077 922 0326**
**செயலாளர்,**
**ஆலய பரிபாலனசபை,**
**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி,**
**ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,**
**மண்கும்பான், வேலணை.**

(cs 45921) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 - 01 - 1954



இறப்பு 09 - 08 - 2022

## திருமதி அம்பலவாணப்பிள்ளை இராசலட்சுமி

மட்டுவில் சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் 246, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணப்பிள்ளை இராசலட்சுமி நேற்றுமுன்தினம் (09.08.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சேதுப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும், அம்பலவாணப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனை வியும், பிரதீபன் (லண்டன்), பிரசன்னா (ஆசிரியர், யா/ பிரான்பற்று கலைமகள் வித்தி யாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மீரா (லண்டன்), சிவசொரூபி (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி கிளை) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திலகவதி, சாந்தநாயகி, வரதராஜன், கமலாம்பிகை, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, திருச்செல்வம் மற்றும் சிவராசா, சரஸ்வதி, கிருஸ்ணபிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஆரத்தியா, தன்விகா, பார்கவி, பாவலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**சி. அம்பலவாணப்பிள்ளை (க[illegible]**
**அ. பிரதீபன் (மகன்) : [illegible]**
**அ. பிரசன்னா (மகன்) : 077 559 3651**

**246, அரசடி வீதி,**
**கந்தர்மடம்**

(CS 45922) (3/6)

# கொலைக் குற்றச்சாட்டு: சந்தேகநபர் உயிரிழப்பு

அங்கொடை உள்ளூராட்சி சபை உறுப்பினர் சுமுது ருக்ஷான் கொலை உட்பட பல கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடுவெல -கொரதொட்ட பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டறிவதற்காக விசேட அதிரடிப்படையினர் அங்கு சென்றிருந்தபோது குறித்த சந்தேகநபர் கல்குவாரி ஒன்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,இ)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05.10.1929

மறைவு 21.08.2021

நீர்வேலி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு இணுவிலை வாழ்விடமாகவும் கொண்ட

## அமரர் சிற்றம்பலம் நல்லையா பாலசிங்கம்

ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் நானாட்டான் பிரதேச செயலகம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (11.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**காங்கேசன்துறை வீதி,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்**

(CS 45912) (3/6)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 06 - 1940



மறைவு 09 - 08 - 2022

## திருமதி பாலகிருஸ்ணன் சரஸ்வதி

நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலகிருஸ்ணன் சரஸ்வதி அவர்கள் நேற்று முன்தினம் (09.08.2022) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுஆச்சாரி - பத்மாவதி தம்பதியிரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசாமி - மீனம்மா அவர்களின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், சண்முக விநாயக மூர்த்தி, சச்சுதானந்தன் (கனடா), காலஞ்சென்ற சிவசாமி (சுதன்) ஆகி யோரின் அன்புத் தாயாரும், இராகினி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினோத், அபிசேக் (கனடா), சிவநீபன், ஜாலினியன், ஜாலினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற இராஜரட்ணம், இராசம்மா, லக்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களாகிய கமலா, நாராயணாச்சாரியார், ராமச்சந்திராச்சாரியார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திருமகள் வீதி,**
**அரியாலை.**

**077 754 9783**

தகவல் :
**குடும்பத்தினர்**

(CS 20256) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




500,000/- ரூபாயால் ஆரம்பிக்கப்படும் 200 நாட்கள் நிலையான வைப்பு

- சந்தைப் பெறுமதியிலும் அதிக வட்டியோடு பல நன்மைகள்
- அதிஉயர் நம்பிக்கையும் பாதுகாப்பும்

| வைப்பின் பெறுமதி (ரூ.) | காலஎல்லை (நாட்கள்) | வட்டிவீதம் (வ.வ) | வ.உ.வ |
|---|---|---|---|
| 500,000 - 1,499,999 | | 20.5% | 21.54% |
| 1,500,000 - 2,499,999 | 200 | 21.5% | 22.65% |
| 2,500,000 அல்லது அதற்கு மேல் | | 22.5% | 23.75% |

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து அல்லது 1975 க்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# விருந்துபசார செலவை செலுத்திய ஜனாதிபதி!

கொழும்பு, ஓக. 11

நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்துக்கான செலவு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பணத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் மாரசிங்க தெரிவித்தார்.

தேநீர் விருந்துபசாரத்துக்காக 2 லட்சத்து 72 ஆயிரம் ரூபா ஜனாதிபதியின் தனிப்பட்ட பணத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.

நெருக்கடி மிக்க காலப்பகுதியில் அரசாங்க செலவினங்கள் குறைந்த பட்சமாக இருக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் கொள்கைக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வியாபாரத்தை விருத்தி செய்ய நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்சினையை சரி செய்வீர்கள்.

**இடபம்:** மதியம் வரை உங்கள் முயற்சிகள் இழுபறியாகும். அதன் பின் நிறைவேறும். திட்டமிட்டு செயற்படுவீர்கள். மதியம் வரை இருந்த நெருக்கடி மாலை விலகும்.

**மிதுனம்:** மதியத்துக்கு மேல் உங்கள் முயற்சியில் பின்னடைவு உண்டாகும். கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். எந்தவொரு செயலிலும் அவசரம் வேண்டாம்.

**கடகம்:** நண்பர்களின் ஆதரவுடன் நீண்ட நாள் பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். உறவுகளிடம் உண்டான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பீர்கள். முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள்.

**சிம்மம்:** துணிச்சலுடன் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வர்.உங்களது உடல்நிலை சீராகும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கன்னி:** முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் போராடி வெல்வீர்கள். பொருளாதார நிலை உயரும்.விலகிச் சென்ற உறவினர்கள் உங்களின் வீடு தேடி வருவார்கள்.

**துலாம்:** மனதில் ஆசைகள் கூடும். உங்களுடைய தேவைகளில் ஒன்று நிறைவேறும்.முயற்சி பலன் தரும். எதிர்பாலினத்தினரிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.கூட்டுத்தொழிலில் சங்கடத்தைச் சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். பெரியோரின் ஆதரவு உண்டு.சுபச் செலவு கூடும். சிலர் நகை, வாகனம் என்று வாங்கி மகிழ்வீர்கள் உங்களின் தனித்திறமை வெளிப்படும்.

**தனுசு:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வரவு உண்டு. மனக்குழப்பம் தீரும். பிறருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நேற்றைய செயல் ஒன்றால் சங்கடம் தோன்றும். குழப்பத்தில் மூழ்குவீர்கள். திட்டமிட்ட செயல்களிலும் எதிர்பார்த்த லாபத்தைக் காண முடியாமல் போகும். வருமானம் கூடும்.

**கும்பம்:** முயற்சி ஒன்று வெற்றியாகும். உங்கள் நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து இலாபம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கையால் மகிழ்வீர்கள்.

**மீனம்:** உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியிடத்தில் இருந்த பிரச்சினைகளை சரி செய்வீர்கள். மகிழ்ச்சி கூடும்.

# இலங்கை போன்று திவாலாகாது சரியான பாதையில் பாகிஸ்தான்

## *பாகிஸ்தானிய நிதியமைச்சர் பெருமிதம்*

கொழும்பு, ஓக. 11

இலங்கையைப் போன்ற திவாலான நிலைக்கு பாகிஸ்தான் தள்ளப்படாமல் இருப்பதற்கு, கொள்கை மாற்றங்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், சரியான பாதையில் நாடு தற்போது சென்றுகொண்டிருக்கின்றது என பாகிஸ்தானிய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எரிசக்தி இறக்குமதியின் அதிக விலை காரணமாக பாகிஸ்தான் நெருக்கடியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது. பாகிஸ்தானில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு 9.8 பில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. இது ஐந்து வார இறக்குமதிகளுக்கு போதுமானதாக இல்லை. அத்துடன் இந்த ஆண்டு அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தானிய நாணயப் பெறுதி மிகவும் பலவீனமடைந்தது. எனினும் கணிசமான கொள்கை மாற்றங்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக இலங்கையைப் போன்று திவாலாகும் நிலைமை தவிர்க்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# சபுகஸ்கந்தவில் விரைவில் எண்ணெய் சுத்திகரிப்பு!

கொழும்பு, ஓக.11

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய்க் கப்பல் எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது. மசகு எண்ணெய் கிடைத்ததும் சபுகஸ்கந்த எண்ணெ[illegible] நிலையத்தின் பணிகள் [illegible] என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

இலங்கையில்

# சீனாவின் கடன்கள் அபாய எச்சரிக்கை

## *பங்களாதேஷ் சுட்டிக்காட்டு*



**கொழும்பு, ஓக. 11**

**இலங்கையைப் போன்று சீனாவிடம் கடனுதவியைப் பெற்று சிக்கலில் சிக்கிக் கொள்ளவேண்டாம் என வளர்ந்து வரும் நாடுகளுக்கு பங்களாதேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

பங்களாதேஷின் நிதியமைச்சர் ஏ.எச்.எம்.முஸ்தபா கமல் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் பணவீக்க அதிகரிப்பு மற்றும் அபிவிருத்தி குறைந்து வருவதால் உலக சந்தையில் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது. மோசமான வெளிநாட்டுக் கடனுதவிகள் நாடுகளை கடன் நெருக்கடிக்குள் தள்ளும் அபா[illegible] ஏற்படுத்திவிடும். தற்போது இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி ஏனைய வளர்முக நாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ஆயினும் சீனா மீது அனைவரும் பழி போடுவதைத் தவிர்க்கவேண்டும். சீனா இலங்கையின் எந்தெந்தத் திட்டங்களுக்குக் கடனுதவி வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் தவறிவிட்டது.

ஒரு திட்டத்துக்குக் கடன் கொடுப்பதற்கு முன் முழுமையான ஆய்வை சீனா மேற்கொள்ளவேண்டும். இலங்கையைப் போன்று பங்களாதேஷ் ஆபத்தான நிலையில் இல்லை - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 - 09 - 1943



இறப்பு 09 - 08 - 2022

## திருமதி இராஜபூபதி சண்முகலிங்கம்

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜபூபதி சண்முகலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (09.08.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பு - பொன்னம்மாவின் அன்பு மகளும் நாகமுத்து - முத்தம்மாவின் மருமகளும் சண்முகலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும் விஜிதா, றெஜினா, சுதாகரன், ஜங்கரன், அனுராகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகராஜா, தயாபரன், அகல்யா, மயூரா, சுகன்யா ஆகியோரின் ஆசை மாமியும் நிஷாந், மோனிஷா,நிரோஜன், துஷாரா, பானுஜன், அஷ்னி, அஷ்வின், அஷ்மி, றேஷ்னா, ஷார்மி, றிகானா, வைஷ்னா, அஷானா ஆகியோரின் பேர்த்தியும் கமலாம்பிகை, காலஞ்சென்ற செல்வமணி, மற்றும் மலர், கலா,சந்திரபாலா, ஜெயக்குமார் ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரிமளம், ராணி மற்றும் பூபாலசிங்கம், பரமலிங்கம், செல்வரட்ணம், தேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

075 660 5578, 077 501 5325

(CS 20257 ) (3/6)



கொழும்புத்துறை , ஹெலன் தோட்டப் பகுதியில் வசிக்கும் மக்கள், குடிதண்ணீரைப் பெறுவதற்குச் சிரமங்களை எதிர்கொண்ட நிலையில், அவர்களின் நலன்கருதி பூமணி அம்மா அறக்கட்டளையால் குழாய்க் கிணறொன்று அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரான ந.விந்தன் கனகரட்ணத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ய-20)


வடமராட்சி கிழக்கு
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)
VADAMARADCHI EAST
PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETY (LTD)
பதிவு இலக்கமும் திகதியும்: N.J/64 - 28.06.2004 மருதங்கேணி
Regd Number & Date: N.J/64 - 28.06.2004 Maruthankerny

அறிவித்தல்
பகிரங்க மூடிய கூறுவிலை


- வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ சங்கத்திற்குச் சொந்தமான உழவியந்திரம் அதன் இழுவைப் பெட்டி என்பன மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.
- மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விடப்படும் வாகனத்திற்கான விண்ணப்ப படிவத்தினைச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/=(ஐநூறு) செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- மேற் கூறிய வாகனத்தினை மருதங்கேணி தெற்கு, தாளையடியில் அமைந்துள்ள தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம்
- பார்வையிடும் நேரம் 11.08.2022 ஆம் திகதி தொடக்கம் 25.08.2022 ஆம் திகதி வரையும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சிக்கிழக்குப் ப.தெ.வ.அ.கூ.சங்கம் .மருதங்கேணிதெற்கு எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உழவு இயந்திரம், இலுவைப்பெட்டி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 11.08.2022 ஆம் திகதி தொடக்கம் 25.08.2022 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 03.09.2022 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- உழவியந்தினையும், இழுவைப்பெட்டியினையும் கூறுவிலையின்படி பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி உழவியந்திரத்தினையும், இழுவைப்பெட்டியினையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

ஆரம்ப விலை :- உழவியந்திரம்:- ரூபா 500000.00 (ஐந்து இலட்சம்)
இலுவைப் பெட்டி:- ரூபா 300000.00 (மூன்று இலட்சம்)
- கூறுவிலைகள் தனித்தனி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்

வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்
தொலைபேசி இலக்கம்:- 0212260520


# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 07 . 1939



மறைவு 10 . 08 . 2022

## இளையதம்பி மாசில்லாமணி

(Rtd.Administrative Officer)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மாசிலாமணி அவர்கள் நேற்று (10.08.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- ஆனந்தவாலை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேல் சுவாமிகள்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சர்வானந்ததேவியின் அன்புக் கணவரும், கௌரிதேவி (Pharmacist, Univercity of Jaffna), அனுசுயா (Pharmacist, TH, Batticaloa), காயத்திரி (France), ரூபாயினி (Ministry of Public administration, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.த.மனோரஞ்சன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), ரவீந்திர குமார் (Pharmacist, TH, Batticaloa), றொமில் (France), காந்தரூபன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி நாகலிங்கம் கோகிலா, திருமதி அன்னலிங்கம் பரிமளா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரமணன் (UK), Dr.மயூரன் (Deputy RDHS, Batticaloa), சேந்தன் (I.C.T.A), துவாரகன் (MLT, Batticaloa), நர்த்திகா, சைவகிரீசன் (மாணவன், பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்விகா, அஸ்மிதா, அனிஷா, சஸ்வினி, நெகேமியா, ஜெரேமி, பெனயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2022) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Dr.த.மனோரஞ்சன் - 0776661141
திரு.செ.ரவீந்திரகுமார் - 0706655221

(CS 20...)

# மரண அறிவித்தல்



## திருமதி பரமேஸ்வரி தியாகராசா

யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்தவருமான திருமதி ப்ரமேஸ்வரி தியாகராசா சனிக்கிழமையன்று (06.08.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும் தணிகா (அவுஸ்திரேலியா), வித்தகா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராம் (அவுஸ்திரேலியா), மகாதேவன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும் வருண், பிரசாந்தி, நிர்மிதா, பிரவின், அன்னியா ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான Dr.திருஞானசம்பந்தன், சிவலிங்கம், மகேஸ்வரி (குஞ்சுஅக்கா), பூபாலசுந்தரம் (பவான்), புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சீதாலஷ்மி, இரத்தினேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, மங்களேஸ்வரி, பத்மாவதி (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் இன்று (11.08.2022) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப்படகுடன் 9 மீனவர்கள் நேற்றுக் கைது

முல்லைத்தீவு, ஓக. 11

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய இழுவைப் படகு ஒன்றைக் கைப்பற்றிய கடற்படையினர் அதிலிருந்த 9 மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே நேற்றுக் காலை இந்தப் படகை கைப்பற்றியுள்ளனர்.

(அ-ஓ-19)

## மண்ணெண்ணெய்...

அரசாங்கம் தெரிவித்துள்ளது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 15ஆம் திகதி மீண்டும் செயற்படத் தொடங்கினால் இன்னும் இரண்டு மூன்று நாள்களில் மண்ணெண்ணெயை உற்பத்தி செய்ய முடியும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் வழங்க முடியாத போதிலும், சந்தையில் விநியோகிக்கப்பட்ட - மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பு விநியோகம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் மீனவர்களுக்கு விடுவிக்கப்பட்ட மண்ணெண்ணெயை, தனியார் பேருந்துகளை வைத்திருப்பவர்கள் கொள்வனவு செய்து டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் மூலம் பேருந்துகளை இயங்கியுள்ளனர்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 87 ரூபாவுக்கு விற்பனை செய்வதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டத்தை இனியும் தாங்க முடியாதது. எதிர்காலத்தில் விலை மாற்றி அமைக்கப்படும். மண்ணெண்ணெய் விலை திருத்தம் செய்யப்பட்டவுடன் மீனவ சமூகம், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(அ-ஒ-இ)

## இந்திய...

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இன்று சீன உளவுக் கப்பலான யுவாங் வாங் 5 வருவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், இந்த டோர்னியர் உளவு விமானத்தை இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ளது. பெரும்பாலும் இந்த விமானம் இந்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை தனது கடல் கண்காணிப்பு மற்றும் பிற நோக்கங்களுக்காக இந்த உளவு விமானத்தைப் பயன்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-ஒ-இ)

## இந்திய முட்டையை...

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் தலைவர் ஜெயவர்த்தன தெரிவித்ததாவது:- இந்தியாவில் தற்போது முட்டை ஒன்றின் விற்பனை விலை சுமார் 18 ரூபாவாக உள்ளது. இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்து ஒரு முட்டையை 20 ரூபாவுக்கு வழங்குவது மிகவும் எளிதானது. தற்போது இங்கு ஒரு முட்டையின் விலை 58, 60, 65 ரூபாவாக உள்ளது. இதனை நியாய விலையில் விற்காமல் விற்பனையாளர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப ஆளுக்கு ஒரு விலையில் விற்கின்றனர். இதனால் நுகர்வோர் சுரண்டப்படுகின்றனர் - என்றார்.

(அ-ஒ-இ)

## ஆளுநரின்...

தெரிவித்த கருத்தைக் கண்டிக்கும் வகையில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணியாளர்களால் நேற்று சுகவீன விடுப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநருக்கு, விவசாயத்திணைக்களப் பணியாளர்களால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் ஆளணி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் உயர் பதவியான மாகாணப் பணிப்பாளர் பதவியானது இலங்கை விவசாய சேவையின் தரம் I க்கு உரித்துடையது. அதற்கு உயர்வாக இலங்கை விவசாய சேவையின் விசேட தரத்தில் ஆளணிகள் எவையும் உருவாக்கப்படவில்லை. இதன் விளைவாகவே இவருக்கான பதவியுயர்வானது வழங்கப்படவில்லை என்பது எமது அறிவுக்கு எட்டியவரை உண்மையாகும்.

வடக்கு மாகாணத்தில் இலங்கை விவசாய சேவையின் விசேட தரத்துக்கான ஆளணி உருவாக்கல் எவையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் நாமறிந்த வகையில் எமது விவசாயப் பணிப்பாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு அவரால் நிராகரிக்கப்பட்டோ அல்லது பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையோ காணப்படவில்லை.

இந்த நிலையில் அவருக்குரிய பதவி மீளப்பெறப்பட்டதானது அரச பணியாளர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி அவமதிப்பதாகவே நாம் கருதுகின்றோம். மேலும் தங்களால் வழங்கப்பட்ட குறித்த செய்தியில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் பல ஆண்டுகாலமாக இந்தப் பதவியில் உள்ளதாகவும், வேறு மாகாணங்களில் குறித்த நடைமுறை அவதானிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஏனைய மாகாணங்களின் விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்களாக பலரும் நீண்ட காலமாக இருந்தமையும், இருக்கின்றமையும் பலரும் அறிந்த விடயமே. எமது மாகாணத்துக்கு மட்டும் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதும், எமது மாகாணப் பணிப்பாளருக்குரிய இடமாற்றமோ பதவியுயர்வோ வழங்கப்படாததும் அவரின் குற்றமன்று என நாம் கருதுகின்றோம். மேலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய திணைக்களங்களிலும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் அதிககாலம் துறைசார் பதவிகளில் பதவி வகிப்பதையும் நாமறிந்துள்ளோம். எனவே எமது மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு ஏற்பட்ட அப[illegible]ரால் வழங்க[illegible] மற்றும் புனிதமான சேவையை மதித்து அவருக்குரிய, நீதியை வழங்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

(அ-ஒ-20)

## தீப்பற்றியதால்...

நபரான சிறுவன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவன் என்று ஊரவர்கள் தெரிவித்துள்ளனர்.

வல்லுவர்புரம் கிராமத்தில் வீடுகளில் புகுந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள், தென்னை மரங்களில் தேங்காய்கள், சங்கிலித் திருட்டு என்பன தொடர்ந்து இடம்பெற்று வந்தன. அந்த வரிசையில் கடந்த சில வாரங்களாக மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோல் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து 4 லீற்றர் பெற்றோலை திருடிய பின்னர் மற்றொரு மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோலைத் திருட சந்தேகநபர் முயற்சித்துள்ளார். வெளிச்சம் போதாமையால் தீக்குச்சியை பற்ற வைத்துள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோலை திருடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வயரில் தீ பற்றியுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளிலும் தீப்பற்றி எரிந்துள்ளது.

சந்தேகநபரான சிறுவன் உடனடியாக தப்பித்து ஓடியுள்ளான். அதற்கிடையில் வீட்டார் விழித்துக்கொண்டு அயலவர்களையும் உதவிக்கு அழைத்துள்ளனர். ஒருவாறு மோட்டார்சைக்கிளில் தீ அணைக்கப்பட்டது. இதற்கிடையில் தப்பியோடிய சந்தேகநபரை பொதுமக்கள் இணைந்து தேடியபோது அருகிலுள்ள பற்றைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

இதன் பின்னர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சந்தேகநபரான சிறுவனை அவர்கள் அழைத்துச் சென்றனர்.

(அ-ஒ-19)

## யாழ். மாவட்டச்...

விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விநியோகத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். இதனால் விநியோக ஒழுங்குகள் மாவட்டச் செயலகத்தை மீறி முகவரால் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதன் ஊடாக எரிவாயு கறுப்புச் சந்தை வியாபாரம் யாழ். மாவட்டத்தில் ஊக்குவிக்கப்படுவதுடன், சமச்சீரான பங்கீட்டு விநியோகம் இல்லாமற்போகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

எரிவாயு விலை குறைக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்துக்கு நேற்று எடுத்துவரப்பட்ட ஆயிரத்து 650 எரிவாயு சிலிண்டர்களில் ஆயிரம் சிலிண்டர்கள் யாழ். மாவட்டச் செயலகம் உட்பட 21 திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

பொதுமக்களுக்கு கிராம அலுவலர் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பதிவுகளுக்கு அமைய விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் முதல் சுற்றில் எரிவாயு கிடைத்த பின்னரே, இரண்டாவது தடவை ஒருவர் பெற்றுக்கொள்ள முடியும் என்று இந்த ஒழுங்குமுறைகளை அறிவித்த யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்திருந்தது.

ஆனால், அரச பணியாளர்களுக்கு இந்த நடைமுறைக்குப் புறம்பாக எரிவாயு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் பொதுமக்கள் குழப்பமடைந்துள்ளனர். அரச பணியாளர்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட ஒரு சில இடங்களில் பொதுமக்கள் நேற்று குவிந்தனர். இதனால் அங்கு குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

இதன் காரணமாக யாழ். மாவட்டச் செயலகப் பணியாளர்கள் தவிர ஏனைய திணைக்களங்களுக்கு மாத்திரம், எந்த விதப் பதிவுமின்றி எரிவாயு வழங்கப்பட்டது. அதுவும் அந்தத் திணைக்களங்களில் இறக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

எரிவாயு விற்பனை நிலையம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வைத்து விற்பனை செய்வது சட்டவிரோதம் என்றுள்ள நிலையில், அந்தச் சட்டவிரோத நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் நேற்று ஈடுபட்டன.

இதேவேளை - அரச பணியாளர்களுக்கான எரிவாயு விநியோகம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் கைவிரித்துள்ளார்.

'கடந்த வாரம் சிலிண்டர் விலை குறைக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தமையால், சிலிண்டர்களைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்க நாம் விரும்பவில்லை. அந்நிலையில் திணைக்களங்களின் நலன்புரி சங்கங்கள் ஊடாக திணைக்களப் பணியாளர்கள் தமக்கான எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றன. அதன் அடிப்படையில் அவர்களுக்கான சிலிண்டர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்த போதிலும் மாவட்ட செயலகத்தில் விநியோகிக்க நான் அனுமதிக்கவில்லை. ஏனைய திணைக்களங்கள் தொடர்பில் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களிடமே வினவவேண்டும்.

அதேவேளை யாழ்ப்பாணத்துக்கு மாதாந்தம் 60 ஆயிரம் சிலிண்டர்கள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் இதுவரை 40 ஆயிரம் சிலிண்டர்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மிகுதியும் மிக விரைவில் வழங்கப்படும். தினமும் யாழ்ப்பாணத்துக்கு 2 ஆயிரம் சிலிண்டர்களை எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் வாரத்தினுள், யாழில் எரிவாயு சிலிண்டர்களைத் தாரளமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய சூழல் ஏற்படும். அதன் பின்னர் நேரடியாக விநியோகஸ்தர்களே தமது வாடிக்கையாளர்களுக்கு சிலிண்டர்களை விநியோகிப்பார்கள்' என மகேசன் தெரிவித்தார்.

எரிவாயு எந்தெந்தப் பிரதேசத்துக்கு எவ்வளவு ஒதுக்கப்பட வேண்டும் என்ற விவரங்களை யாழ். மாவட்டச் செயலகமே தீர்மானித்து எரிவாயு விற்பனை முகவருக்கு அறிவுறுத்தி வந்த நிலையில், மாவட்டச் செயலகத்துக்குத் தெரியாமல் அரச பணியாளர்களுக்கு விநியோகிக்கும் முடிவை எடுத்தது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதன் ஊடாக, கறுப்புச் சந்தை வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. அதேபோன்று, ஒருசிலர் தமது தேவைக்கான எரிவாயுவை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள, கிராம அலுவலர் ஊடாகப் பதிவு செய்த மக்கள் இன்னமும் தமக்கான முதலாவது சிலிண்டரைப் பெற்றுக் கொள்ளவே முடியாமல் அவதிப்படுகின்றனர். இவ்வாறு நடைமுறைக்கு புறம்பான விநியோகப்பதன் ஊடாக சமச்சீரான பங்கீடு குழப்பமடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்குந்த சந்தைக்கு வெளியே மரக்கறி விற்பதைத் தடுக்குமாறு சந்தை வியாபாரிகள் கோரிக்கை

### நேற்றுப் போராட்டம்

சந்தைக்கு வெளியே சுற்றுவட்டப் பகுதிகளில் உள்ள பலசரக்குக் கடைகளில் மரக்கறி வியாபாரத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி கல்வியங்காடு, செங்குந்த சந்தை வியாபாரிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்கள் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேசசபை மற்றும் கோப்பாய் பொலிஸார் ஆகியோரிடம் கையளித்தனர்.

சந்தைக்கு வெளியே உள்ள பலசரக்கு கடைகளில் மரக்கறி வியாபாரம் நடைபெறுவதால் , சந்தைக்குள் வந்து மக்கள் மரக்கறியைக் கொள்வனவு செய்வதில்லை என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தையின் உள்ளே மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் எம்மிடம் மக்கள் வருவதில்லை. சில கடைகளில் சுகாதாரமின்றி மரக்கறிகளைக் கொட்டி விற்கின்றனர். வீதியோரக் கடைகளில் மரக்கறி கொள்வனவுக்காக வருவோர் தமது வாகனங்களை வீதிகளில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. எமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் சந்தைக்கு வெளியே உள்ள கடைகளில் நடக்கும் மரக்கறி வியாபாரத்தைத் தடை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (எ-27)

## இலத்திரனியல் ஓட்டோ பதிவுசெய்ய அனுமதி!

கொழும்பு, ஓக. 11

இலத்திரனியல் ஓட்டோக்களை பதிவு செய்வதற்கான மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எரிபொருள்களைப் பயன்படுத்தாமல் இலத்திரனியல் சக்தியில் இயங்கும் வாகனங்களைப் பிரபலப்படுத்தும் நோக்கில் இலங்கையில் இலத்திரனியல் ஓட்டோக்களைப் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முன்மொழிவு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்டபோது அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(ம-14-இ)

**மணமகள் தேவை**

1981ல் பிறந்த உடுவிலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங்) புரியும் பூரம், 1ம் பாதம் 14. பாவக்கிரகத்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.

074 020 6165, 077 029 4176

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 06 - 1984

மறைவு 10 - 08 - 2022



### சிவசோதிலிங்கம் சொரூபன்

(LIC Insurance)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதிலிங்கம் சொரூபன் (LIC Insurance) அவர்கள் நேற்று (10.08.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கார்த்திகா (BOC) அவர்களின் அன்புக்கணவரும், தனிகேசன், சஷ்ரிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசோதிலிங்கம் காலஞ்சென்ற இந்திராதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சிவரூபன், பரமரூபன், மயூரன், இராகுலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சம்பந்தநாதன் (G.S), விஜயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நிர்த்திகாவின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்
077 239 5792

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு

### பெற்றோல்...

வீழ்ந்து உயிரிழந்துள்ளார். திடீரென ஏற்பட்ட மாரடைப்பே உயிரிழப்புக் காரணம் என்று ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 38 வயதுடைய சொரூபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கொக்குவிலில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைக் கொண்டு சென்று கியூஆர் குறியீட்டை காண்பித்த அவர், திடீரென மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ-26)

### 12 திட்டங்களுக்கான...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெய்க்கா நிறுவனம், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஜப்பானின் 12 திட்டங்களுக்கான நிதியை இரத்துச் செய்துள்ளது. இலங்கை, சர்வதேச நாடுகளில் இருந்து பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தப்போவதில்லை என்று அறிவித்திருந்த நிலையில் ஜெய்க்கா நிறுவனம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. எனினும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வரும் வரையில் இந்த நிதி தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஜெய்க்கா நிதியம் அறிவித்துள்ளது - என்றார். (அ-ஒ-இ)

### காலியாகின்றது...

அகற்றப்பட்டுள்ளது.

காலி 'கோத்தா கோ கம' போராட்டக்களத்தில் தற்காலிகக் கூடாரங்கள் அகற்றப்படுவதை தடுக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 4 மனுக்களும் நேற்று மீளப்பெறப்பட்டுள்ளன.

காலிமுகத்திடலிலுள்ள போராட்டக்களத்திலிருந்து விலகுவதற்கு ஒன்றிணைந்த குழுவாக தீர்மானம் எடுத்ததாக சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் அரசுக்கு எதிராக அழைப்பு விடுக்கப்பட்ட போராட்டத்தில் மக்கள் பங்கேற்பு இல்லாத நிலையில், போராட்டக்காரர்கள் கூடாரங்களை அகற்ற முடிவு செய்துள்ளனர். (அ-ஒ-இ)

### போலி நாணயத்தாள்...

அண்மையில் சென்ற ஒருவர் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை வழங்கி பொருள்களை வாங்கிவிட்டு மிகுதிப் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார். எனினும் அவை போலி நாணயத்தாள்கள் என அறிந்த கடைக்காரர்கள் இருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினரால் 27 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்களும் அவரிடமிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ஒ-26)

### தாய்லாந்தில்...

கிறார் என உறுதி செய்த தாய்லாந்துப் பிரதமர், தனக்கு நிரந்தரப் புகலிடம் அளிக்கும் மூன்றாவது நாட்டை தேடும் வரை அங்கு தங்கியிருப்பார் என்றும், இந்தக் காலப்பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டேன் என்று உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூரிலிருந்து அவர் தாய்லாந்துக்கு இன்று செல்வார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தாபய இன்னும் இராஜதந்திர கடவுச்சீட்டு வைத்திருப்பதால் தாய்லாந்தில் 90 நாள்கள் தங்கலாம் என்று வெளியுறவு அமைச்சர் டான் பிரமுத்வினாய் தெரிவித்தார். இந்தப் பயணத்தை இலங்கை அரசு எதிர்க்கவில்லை எனவும் தாய்லாந்து அரசாங்கம் அவருக்கு தங்குமிட ஏற்பாடுகளைச் செய்யாது எனவும் டான் பிரமுத்வினாய் தெரிவித்தார். (அ-ஒ-இ)

**விற்பனைக்கு**

யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் யாழ் கே.கே.எஸ் வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ் ஆரியகுளம் சந்தியில் 3 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

லயன் பொமனேறியன்
3 மாதம், தடுப்பூசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 117 8618

**மணமகன் தேவை**

யாழ்.இந்து, 1991, மூலம் 1ம் பாதம், செவ்வாய் 06 ல் (குற்றமில்லை) கிரகபாவம் 32 ¼, அரச பணிபுரியும் மணமகளிற்கு பொருத்தமான வரன் தேவை.

077 616 1739

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

**TECHNO WORLD**

**தொழில்நுட்பக் கல்லூரி**

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

A/L 2022 and DAY CLASS க்கான
PAPER CLASS வகுப்புக்கள் ஆரம்பம்

(A/L 2022, DAY CLASS - பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்)
(திங்கள் முதல் வெள்ளி காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை)

❖ நேரம் : 8.30 AM ❖ ஆரம்பம் : 13.08.2022 சனிக்கிழமை

தொடர்புகளுக்கு: 077 017 5346

(cr 37034) (2.6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org